**முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்) அலுவலகம், கிண்டி, சென்னை-600032.**

**முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர்: திரு.தெபாஷீஷ் ஜானா, இ.வ.ப.,**

செ.மு.ஆணை எண்,எம்2/26765/2023 நாள்: 20.12.2024

பொருள்: பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IVன் மூலம் இளநிலை உதவியாளர் வனத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடுதல் –தொடர்பாக.

பார்வை:

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை க.எண்.1945/PSD-D2/2023, நாள்.01.09.2023
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ந.க.எண்.ண1/21400/2023-1, நாள்.15.09.2023
3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ந.க.எண். எம்2/26765/2023 நாள்.21.09.2024
4. உதவி இயக்குநர், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், சென்னை, ந.க.எண்.011294/அ6/2023, நாள்.30.11.2023

.......

ஆணை:

பார்வை (1) ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IVன் மூலம் இளநிலை உதவியாளர்களாக வனத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்) அலுவலகத்தில் பணிபுரியும் கீழ்காணும் இளநிலை உதவியாளர்களுக்கு, மேற்காண் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் பத்தி 3ல் தெரிவிக்கப்பட்டவாறு மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28-ல் வழங்கப்பட்ட ஆணையின் படியும் இளநிலை உதவியாளர்கள் பணியில் சேர்ந்தநாள் முதல் பின் வருமாறு பணிவரன்முறை செய்தும், மூன்றாண்டு கால தொடர் பணிக்குட்பட்டு இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டும் ஆணையிடப்படுகிறது.